


தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க தொழிலாளர் அணி சார்பில் நடைபெற்ற கழக முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளரும், தமிழ்நாடு அரசு பாடநூல் கழகத் தலைவருமான திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார். இப்பொதுக்கூட்டத்தில் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, சு.ப.தமிழழகன், குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், சிவானந்தம், எஸ்.செல்வராஜ், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, கல்யாணசுந்தரம், கண்ணன், மாடாகுடி செல்வராஜ், எஸ்.பாரி, நீலநாராயணன், கோ.க.அருள், சதீஷ், என்.ராமதாஸ், எஸ்.சக்திவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு, சித்தோடு, ஆவின் பால்பண்ணை வளாகத்தில்

# பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்!

ஈரோடு, நவ.28-

**ஈரோடு, சித்தோடு, ஆவின் பால் பண்ணை வளாகத்தில் ரூ.50 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு, சித்தோடு, ஆவின் பால் பண்ணை வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.

**பால்வளத் தந்தை பரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தல்**

கொங்கு மண்டலத்தின் பெருமையாகத் திகழ்ந்த எஸ்.கே.பரமசிவன் 'பசுமை நிலம், வெண்மைப் பால்' என்ற கனவைக் கொண்டு நூற்றுக்கணக்கான மாடுவளர்ப்பாளர்களை ஒன்றிணைத்து, தமிழ்நாட்டிற்குப் புதிய பொருளாதாரக் களத்தை உருவாக்கியதோடு, விவசாயக் குடும்பங்களின் வருவாயை உயர்த்தவும், பால் விநியோக முறையை நவீனப்படுத்தவும், பால்வளத் துறையைத் தொழில்மயமாக்கவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டார்.

தமிழ்நாடு அரசின் ஆவின் நிறுவனம், கூட்டுறவு பால் சங்கங்கள், பால் செயலாக்கக் கட்டமைப்புகள்-அனைத்தும் அவர் விதைத்த விதையின் செழிப்பான விளைவுகளாகும். அதனால் அவர் பால்வளத் தந்தை என அழைக்கப்படுகிறார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பரமசிவன் அவர்களின் சேவையை போற்றும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் 20.12.2024 அன்று நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "ஈரோடு மாவட்டம், சின்னியம்பாளையத்தில் பிறந்து, நாட்டு விடுதலைக்காக பாடுபட்டதோடு, தன்னுடைய அயராத முயற்சிகளால் பால் உற்பத்தியைப் பெருக்கி, தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் அய்யா அவர்களின் திருவுருவச்சிலை, ஈரோடு பால் பண்ணையில் நிறுவப்படும்" என்று அறிவித்தார்.

அதன்படி, ஈரோடு, சித்தோடு, ஆவின் பால் பண்ணை வளாகத்தில், தமிழ்நாட்டில் வெண்மை புரட்சிக்கு வித்திட்ட பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் அவர்களுக்கு நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலையை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இவ்விழாவில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி நாகரத்தினம், முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர்எஸ். கந்தசாமி, பால்வளத் தந்தை எஸ்.கே. பரமசிவன் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இரா.மாரிமுத்து தலைமை! ஆர்.எஸ். சத்தியம் ஏற்பாட்டில்!

# நாகையில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா! நலத்திட்ட உதவிகள்!

## என்.கௌதமன் வழங்கினார்! இல.மேகநாதன், மு.லோகநாதன், ஜி. மனோகரன் பங்கேற்பு!

நாகை , நவ.28:

நாகை மாவட்டம் நாகை நகர திமுக இளைஞரணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்தியன் ஏற்பாட்டில் , கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கழக இளைஞரணி செயலாளரும்,

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாகை நகர திமுக இளைஞரணி சார்பில் நாகை புதிய பேருந்து நிலையம் அருகில் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நாகை நகர கழக செயலாளர் நகரமன்ற தலைவர் இரா.மாரிமுத்து தலைமை தாங்கினார்.

நகர இளைஞரணி செயலாளர் ஆர்.எஸ். சத்தியன் வரவேற்றார். தலைமை செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், மாவட்ட இளைஞர் இளைஞர் அணி அமைப் பாளர் பி.என்.கார்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் எம் கவர்ன் மெண்ட் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் பொதுமக்களுக்கு மதிய உணவாக பிரியாணி வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ. செங்குட்டுவன்பொதுக் குழு உறுப் பினர் பாண்டியன், தலைமை கழக

வழக்கறிஞர மூ.தினேஷ் குமார்

மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா. முருகையன், எஸ்.பால் ராஜ், பி முருகானந்தம்

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டேனியல் சத்யா ,

நகர துணைச் செயலாளர்கள் பி.திலகர்வெற்றிலைக் கடை ஜி.சிவா அவர்கள் சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் அங்காடி சேகர்,

ப.ராஜா, மரியதாஸ், ஆர்.கே.பிரதீப், இரா.சுந்தர பாண்டியன், சு.செல்வம், ச.பாலா, சரவணன், பாலமுருகன், நாகதேவன், மற்றும் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பா.அருண் கோ.கிருஷ்ண மூர்த்தி தி.மணிகண்டன் சத்யா ஸ்ரீதர் பிரதீப் (எ) த.செந்தில்குமார் பா.பிரவீன் நாஜிம் மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள் வார்டு இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவை மாநகர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாவட்ட தி.மு.க. தலைமை அலுவலகத்தில் மாநகர் மாவட்ட அவைத்தலைவர், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துரை.செந்தமிழ்ச் செல்வன் சிறப்புரையாற்றினார். கழக சொத்து பாதுகாப்பு குழு துணைத்தலைவர், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கழக தீர்மானக்குழு செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், தலைமைக் கழக நிர்வாகிகள், பகுதி கழக பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை, டி.எம்.எஸ்.வளாகம், சீர்மரபினர் நல வாரியக் கூட்ட அரங்கில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் சீர்மரபினர் வாரியத் தலைவர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (26.11.2025) சீர்மரபினர் நல வாரியத்தின் நான்காம் வாரியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலத்துறை அரசு செயலாளர் இ.சரவணவேல்ராஜ், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர், முனைவர்.சீ.சுரேஷ்குமார், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர், திருமதி வ.கலைஅரசி, சீர்மரபினர் நல வாரிய துணைத்தலைவர் இராசா அருண்மொழி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் வாரியத்தின் அரசு அரசு சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மகளிர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு மகளிர் அணியின் ஈரோடு வடக்கு மாவட்டம் மற்றும் கும்பகோணம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஈரோடு வடக்கு மாவட்டம்**

| | |
|---|---|
| தலைவர் | கே.ஜி.சரஸ்வதி, 10, பழனியப்பா வீதி, புதுவள்ளியம்பாளையம், கோபி. |
| துணைத் தலைவர் | சி.கிருஷ்ணவேணி, 4/117, மெயின் ரோடு, அளுக்குளி, கோபி. |
| அமைப்பாளர் | எம்.பாண்டியம்மாள், 19, இந்திரா வீதி குறுக்கு-1, தவுட்டுபாளையம், அந்தியூர். |

துணை அமைப்பாளர்கள் 1) கே. ரேணுகாதேவி, 135/1, கஸ்பா வீதி, பொலவக்காளிபாளையம், கோபி. 2) எஸ்.மகேஸ்வரி, 21/1, திருவள்ளுவர் வீதி, அரியப்பம்பாளையம், சத்தி. 3) பி.பாக்கியலக்ஷ்மி,217, கவின் கார்டன், சின்னமொடச்சூர், கோபி. 4)எம்.ஜெயலட்சுமி, சுமைதாங்கி அருகில், தாழைக்கோம்புபுதூர், கூகலூர், கோபி. 5) எம்.பர்வீன்பேகம், 23ஏ, சிலேட்டர் ஹவுஸ் வீதி,கோபி.

| | |
|---|---|
| வலைத்தள பொறுப்பாளர் | ஏ.ஹாத்துண்ஜன்னா, 132/3, மேற்கு வீதி, நேரு நகர்,அரியப்பம்பாளையம், சத்தி. |

**தஞ்சை வடக்கு மாவட்டம்**
**கும்பகோணம் மாநகரம்**

| | |
|---|---|
| தலைவர் | ஜி. தீபா, 72/43, சிங்காரம் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். |
| துணைத் தலைவர் | பா. விஜயா, 77/36, சாரங்கபாணி தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். |
| அமைப்பாளர் | ச. தமிழ்ச்செல்வி மோகன், 25/34, பாணாதுறை மேல வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். |

துணை அமைப்பாளர்கள் 1)த.பானுமதி,18/127, கும்பேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2)பி. பிளாரன்ஸ்மேரி, 7சி, பாணாதுறை மெயின் ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) அ. ஜெயலட்சுமி, பாணாதுறை 14வது தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4)பா. மங்கையர்கரசி, 74, சாரங்கபாணி தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5)வே. மகாலட்சுமி, 86, காசிராமன் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 6)அ.வர்ஷா, 2ஏ, கோதண்டபாணி தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 7) ப. பானுமதி, 30, சித்தா தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

| | |
|---|---|
| **அண்ணா அறிவாலயம்**<br>சென்னை - 18.<br>நாள்: 26.11.2025 | **ஜெ.ஹெலன்டேவிட்சன்**<br>செயலாளர்<br>தி.மு.க. மகளிர் அணி |



துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. தலைமையில் நகர செயலாளர்கள் நாட்டான்.மாது,எம்.பி.கௌதம் ஏற்பாட்டில் நான்கு ரோடு பகுதியில் கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.உடன் நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது மற்றும் தி.மு.க.வினர் பங்கேற்றனர்.




தி.மு.க. இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, புதுச்சேரி மாநில இளைஞர் அணி சார்பில், மாநில துணை அமைப்பாளர் வழக்கறிஞர் அகிலன் ஏற்பாட்டில், ரத்ததான முகாம் பத்துக்கண்ணு லட்சுமிநாராயணா மருத்துவமனையில் நடந்தது. மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ. முன்னிலையில், நடைபெற்ற முகாமை மாநில கழக அமைப்பாளர், இரா. சிவா தொடங்கி வைத்தார். இளஞ்செழியப்பாண்டியன் வரவேற்று பேசினார். இந்த முகாமில், எஸ்.பி. சிவக்குமார், வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., லோகையன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.